எண்.5/7/3/7/பதிவாளர்/பால்வளம்/2018/பகுதி/95
புதுச்சேரி அரசு
கூட்டுறவுத்துறை (பால் வளம்)
வி.வி.பி. நகர், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.
----

புதுச்சேரி, நாள். 19 .08.2025

**சுற்றறிக்கை**

பொருள்: பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் - வங்கியின் மூலம் கறவை மாடு கடன் வழங்குதல் - வழிக்காட்டு முறைகள் - தொடர்பாக.

***

புதுச்சேரி மாநிலத்தில் கால்நடைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் பால் உற்பத்தியை உயர்த்தும் வகையில், பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கு 75% மானியத்துடன் உயர்ரக கறவை மாடுகள் / எருமை மாடுகளை வழங்குவதற்கு புதுச்சேரி அரசு நிதி வழங்கி உள்ளது. மீதமுள்ள 25% தொகைக்கு பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தங்கள் உறுப்பினர் / பயனாளிகளுக்கு புதுச்சேரி மாநில கூட்டுறவு வங்கியில் கறவை மாட்டு கடன் ஏற்பாடு செய்யவும், அதனை சம்மந்தப்பட்ட உறுப்பினர்கள் ஊற்றும் பாலின் தொகையிலிருந்து மட்டுமே பிடித்தம் செய்து அதனை வங்கியில் செலுத்தவும் அறிவுறுத்தப்படுகிறது.

அதில் ஏதேனும் உறுப்பினர் சங்கத்தில் பால் ஊற்றுவதை நிறுத்தினால் அந்த கடன் தொகை உறுப்பினர்களின் பொறுப்பே. அவ்வாறு வசூல் செய்ய முடியாத கடன் தொகையை பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தங்கள் சங்க நிதியிலிருந்து எக்காரணம் கொண்டும் வங்கிக்கு செலுத்தக் கூடாது என வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறு சங்கங்கள் தங்கள் நிதியிலிருந்து உறுப்பினர்களின் கடனை சரிசெய்தால் அத்தொகை சங்க தலைவர் / நிர்வாகி / செயலாளர் அவர்களிடமிருந்தே வசூல் செய்யப்படும்.

மேலும் பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு வேறு எந்த தேசிய மயமாக்கப்பட்ட / தனியார் வங்கிகளில் கறவை மாடு கடன் ஏற்பாடு செய்யும் பட்சத்தில் அந்த குறிப்பிட்ட உறுப்பினரே கடனுக்கு பொறுப்பு ஆவார். சங்கம் எக்காரணம் கொண்டும் கறவை மாட்டின் கடன் தொகைக்கு பொறுப்பேற்று அக்கடன் தொகையை சங்க நிதியிலிருந்து செலுத்தக் கூடாது என மேலும் வலியுறுத்தப்படுகிறது.

//ஆணைப்படி//

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES, PUDUCHERRY

5/6 பால்வள அபிவிருத்தி அதிகாரி
கூட்டுறவுத் துறை

பெறுநர்
தலைவர்/நிர்வாகி,
____________________ கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம், (அ) எண்.பி.
____________________ புதுச்சேரி / காரைக்கால்.

**நகல்**

1. மேலாண் இயக்குநர்,
   புதுச்சேரி மாநில கூட்டுறவு வங்கி,
2. மேலாண் இயக்குநர்,
   புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
3. மேலாண் இயக்குநர்,
   காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,

} தொடர் நடவடிக்கைகாக

4. The Web Editor.
5. கோப்பு 2025.